

# தமிழ்ச்சிட்டு

## சிறுவர் கலையிதழ்



## துவளாத வாழ்வு, என் வாழ்வு!

அன்பிலே மழைத்தண்ணீர்!
அறிவிலே பெருநெருப்பு!
ஆற்றலில் சூறைக்காற்று! - உளத்
தென்பிலே மாமலை!
தெளிவிலே நீர்நிலை!
திரிதலில் வானப்பறவை!
என்பிலே நல்லுறுதி!
இயல்பிலே தமிழுணர்வு!
எண்ணத்தில் தமிழர் மேன்மை!
-வருந்
துன்பிலே துணிந்தமனம்!
துயிலிலே விழித்த நிலை!
துவளாத வாழ்வென் வாழ்வே!

பட்டம் என் மூக்குப்பீ!
பதவியென் கால்தூசு!
பாராட்டென் காதுக்குறும்பீ-பெருந்
திட்டமுடன் இயங்குவேன்!
தீரமுடி வெய்துவேன்!
தேர்வதனை முனைந்து செய்வேன்!
வெட்டெனவே பேசுவேன்!
விளக்கமுற எழுதுவேன்!
வீணரை விலக்கிவைப்பேன்! -வரின்
கட்டாயம் பேசுவேன்;
கருத்தைப்பரி மாறுவேன்!
கடுகளவும் பகைகொள்ளேனே!

குரல் 6
இசை - 11

விலை
25 காசு

# ஆவே! ஆவே!

ஆவே! ஆவே! ஆவின்பால்
அருந்தக் கொடுப்பாய்; தருவேன்,புல்!
தாவும் கன்றுக் குட்டிக்குத்
தந்தே மிகுந்ததைத் தருவாயே!

பசும்புல் வெளியில் மேய்ப்பேனே!
பால்போல் கழுநீர் வைப்பேனே!
கொசு, ஈ மொய்க்கா வகையாகக்
கொட்டிலைத் தூய்மை செய்வேனே!

உடலைத் தடவிக் கொடுப்பேனே!
உண்ணிகள் கிள்ளி எடுப்பேனே!
கடலைப் பிண்ணாக் கிடுவேனே!
கயிற்றைத் தளர்த்தி விடுவேனே!

இரைந்து கூவி அழைப்பாய், நீ!
என்னை எழுப்பி விடுவாய், நீ!
பரந்த வாயில் தெளிப்பதற்குப்
பச்சைச் சாணம் இடுவாய், நீ!

அம்மா தந்த தின்பண்டம்,
அனைத்தும் கன்றுக் குட்டிக்கே!
அம்மா பெற்ற குழந்தைகளை
அன்பாய் வளர்க்கும் தாயே, நீ!

---

# நிலா!

பொட்டு நிலா! பொட்டு நிலா!
போவ தெங்கே? சொல்வாய்!
வட்ட நிலா! வட்ட நிலா!
வருவேன்; கொஞ்சம் நிற்பாய்!

துணையில் லாமல் விண்மீன் காட்டில்
தனியாய்ப் போவது எங்கே?
அணையில் லாத வானக் கடலில்
அலைந்து போகும் சங்கே!

பள்ளிக் கூடம் போகின் றாயோ?
பையை எங்கே காணோம்?
வெள்ளிக் குடமே! மிதந்து செல்வாய்!
விரைவேன், துணையாய் நானும்!



# தமிழ்ச்சிட்டு

தனித்தமிழ்
சிறுவர் கலை இதழ்

இன்றைய பயனே நேற்றைய உழைப்பு!
இன்றைய சிறுவர் நாளைய உலகம்!
நன்று செய்வதே நமக்குநல் வாழ்க்கை!
என்றும் அழியாது இருப்பது புகழே!

குரல்-6. | தி. பி. ௨௦௦௪. சுறவம் (பெப்· 73) | இசை 11

## அன்பும் அறிவும் - 4.

அன்புணர்வு இயல்பூக்கச் சூழல்களால், வாழ்கின்ற இடங்களுக்கேற்ப வளர்கிறது, அமைகிறது, மாறுபடுகிறது என்றும், அவ்வடிப்படையில் சமவெளிகளில் வாழ்பவர்களைவிட, மலைப்புறங்களில் வாழ்பவர்களுக்கு அன்புணர்வு கொஞ்சம் மிகுந்திருக்கும் என்றும் சென்ற கட்டுரையில் பார்த்தோம். இனி, அந்நிலைகளை மேலும் சிறிது விளக்கமாக இக்கட்டுரையில் காண்போம்.

நிலவியல் அமைப்புப்படி மலையும், மலையை யடுத்துக் காடும், காட்டையடுத்துச் சமவெளியும், அதனையடுத்துக் கடலும் உள்ளதை நாம் அறிவோம். எனவே மலைகளில் வாழ்ந்திருந்த மக்கள் அறிவுணர்வு பெறப் பெறக் கீழிறங்கி வருவார்களானால், அடுத்து அவர்கள் காட்டுப்பகுதிகளிலேயே வாழ்ந்திருக்கவேண்டும். அவ்வாறு காட்டுப் பகுதிகளில் வாழ்க்கையைத் தொடங்கும் பொழுது அவர்களுக்கு மலைப்பகுதிகளில் வாழ்ந்திருந்த நிலைகளைவிட

வெளியீட்டாளர், பொறுப்பாசிரியர்: பெருஞ்சித்திரன்
தென்மொழி மின் அச்சகம், கடலூர்-1. தமிழகம்.

அறிவுணர்வு மிகுந்துவரத் தொடங்கியது. அறிவு தொடங்கியவுடன் பொருள்களை வேறுபட்டுக் காணும் நிலையினை மாந்தன் பெறுவான்.

ஒரு குழந்தைக்கு அறிவு வளரா நிலையில் நெருப்பும் ஒன்றுதான், ஒருகனியும் ஒன்றுதான். ஒரு கல்லைக்கூட உண்பொருளென்று எடுத்து வாயில் வைப்பதையும், எரிந்து கொண்டிருக்கும் சுடரைக்கூட ஒரு குழந்தை பிடிக்கப் போவதையும் நாம் கண்டிருக்கின்றோம். எனவே அறிவற்ற நிலையில் பொருள்களை வேறுபட்டு உணராத குழந்தை, அறிவு வளர வளர, பொருள்களை வேறுபட்டு அறியத் தொடங்குகின்றது. என் பொருள், உன்பொருள் என்ற வேறுபாட்டுணர்ச்சியையும் அது பெறுகின்றது. ஒரு குழந்தையின் கைகளில் உள்ள ஒரு பொருளை நாம் வாங்கும்பொழுது அஃது அழத் தொடங்குகின்றது. அக்கால் அது தன்பொருள் உணர்ச்சி பெற்றுவிட்டதை யறியலாம்.

இனி, அக்குழந்தை சிறிதே வளர்ந்தவுடன், அது தன்னைச் சுற்றியுள்ள பொருள்களின் வேறுபாடுகளைப் படிப்படியாக உணர்ந்து கொள்கின்றது. நெருப்பென்றும், பழமென்றும், கல்லென்றும் அறிந்து கொள்வதுடன், நெருப்பைத் தீண்டக் கூடாதென்றும், தீண்டினுல் சுடுமென்றும், பழத்தைத் தின்ன வேண்டுமென்றும், கல்லைக் கடிக்கக் கூடாதென்றும் பொருள்களை வேறுபட்டு அறிவதுடன் அவற்றின் பயன்களையும் வேறுபட்டு உணர்கின்றது.

அவ்வறிவு மேலும் வளர வளர, அப்பொருள்களில் அது உரிமை கொண்டாடுகின்றது. இந்நிலை அறிவின் அடுத்த படிநிலை. இங்கு அன்புணர்வினின்று அறிவுணர்வு மீறி வளர்கின்ற நிலையை எய்துகின்றது. எனவே மாந்த நிலையில் தொடக்கத்தே விளங்கிய அன்புணர்வு வளர்ந்து அறிவுணர்வு தோன்றியவுடன், வேறுபாட்டு உணர்வும், அதனையடுத்து உரிமையுணர்வும் தோன்றுகின்றன. தன்பொருள் உணர்ச்சிதான் உரிமையுணர்வை வளர்க்கும் தன்மையது.

குழந்தை ஒரு பொருளைத் தன்பொருள் என்று பிரித்துணர்ந்தவுடன், அதன்மேல் உரிமையைச் செலுத்துகின்றது. அக்கால் அதன் கையிலுள்ள பொருளை நமக்குத் தர மறுக்கின்றது. அப்பொழுது அதற்கு உரிமை யுணர்வு மிகுந்து நிற்பதைப் பார்க்கலாம்.

அதன்பின்னும் நாம் அந்தப் பொருளை அதன் கைகளினின்று பறிக்க முயற்சி செய்வோமானால், அக் குழந்தை அப் பொருளைத் தன் மடியிலேயோ, முதுகுப் புறத்திலோ மறைத்துவைத்துக் கொண்டு, அப்பொருள் தன்னிடம் இல்லை என்று நம் முயற்சியை விட்டு விடும்படி தெரிவிக்கின்றது. அக்கால் அதற்குக் காத்தல் உணர்ச்சி தோன்றுகின்றது என அறிந்து கொள்க. அக்காத்தல் உணர்ச்சி அக்குழந்தைக்குத் தோன்றும் பொழுது, அது பொருள் வேறுபாட்டறிவையும், பொருளின் பயனறிவையும், அது தனக்கு வேண்டும் எனும் தன்தேவையறிவையும், தான் அப்பொருளை வைத்திருப்பதால் அது தனக்கே உரியதென்னும் தன் பொருள் உணர்வறிவையும், அதைப் பிறர்பறித்துக் கொள்ளவும் முற்படுவார்களாகையால் அதைப்பிறரிடமிருந்து காத்துக்கொள்ள வேண்டுமென்ற காத்தலறிவையும் படிப் படியாகப் பெற்றுவிட்டது என்று நாம் உணர்ந்து கொள்ளல் வேண்டும். இவ்விடத்து, இவ்வனைத்துப் படிநிலை யறிவுகளுக்கும், அக் குழந்தை அப் பொருளின்மேல் கொண்ட அன்புணர்வே கரணியம் என்பதை மறந்து விடுதல் கூடாது. எனவே, மாந்தன் ஒருபொருள்மேல் கொண்ட அன்புணர்வே அவனின் அடுத்து வளரும் அறிவுணர்வுக்கு அடிப்படையாக அமைகின்றதென்பதைத் தெற்றெனத் தெரிந்து கொள்க.

இனி, அவ்வறிவுணர்வு வளர, வளர, தொடக்கத்து அப் பொருளின்மேல் இருந்த அன்புணர்வும் அவ்வறிவுநிலைப் படி நிலைகளுக்கு இணையாக வளரத் தொடங்குகின்றது எனவும் உய்த் துணர்க. எனவே, அறிவு மிக மிக அன்பும் மிகுகின்ற தென்பதை யும், அன்பு மிகுதலே அறிவு அடுத்தடுத்து மிகுந்து போதலுக்கு அடிப்படையாம் என்பதையும் உறுதி செய்து கொள்க.

இனி, காத்தல் படிநிலைவரை இணைந்து வளர்ந்த அறிவும் அன்பும், அதற்கடுத்து வரும் படிநிலைகளில்தாம் மாந்தனுக்கு மாந்தன் வேறுபட வளர்கின்றன. எனவே இக் காத்தல் படிநிலை வரை மாந்த உணர்வு வளர்ச்சியை ஓர் எல்லைப் படுத்தி அதற்கு இணையுணர்வுப் படிநிலை என்னும் பெயரைக் கொடுத்துக் கொள் வோம். இவ்விணையுணர்வுப் படிநிலையின் எல்லைவரை மாந்த வாழ்வு அமைந்த வகையினை மீண்டும் நுணுகிப் பார்ப்போம்.

மலைப்புறத்துக் கட்டுமீறிய அன்புணர்வு கொண்டு வாழ்ந்த மாந்தனின் வாழ்க்கை, அவன் காட்டுப் புறத்தே வந்து வாழ்கையில் ஒரு கட்டுப்பாடு எய்தியிருத்தல் வேண்டும். அஃதாவது பொருள் வேறுபாட்டு அறிவு அவனுக்கு விளங்கி, பொருட் பயன் விளங்கி, தன்தேவையறிவு விளங்கும் வரை மலைகளில் வாழ்ந்து கொண்டிருந்த மாந்தன், அம் மலைகளினின்று இறங்கி வந்து, காட்டுப் புறத்தே தன் வாழ்வியலைத் தொடங்குகின்ற நிலையில் தன் பொருள் உரிமை யுணர்வு அவனுள் தலை தூக்கியது. அக்கால் பொருள்களை உரிமைப் படுத்தும் வேற்றுமை யறிவின் முதனிலையை அவன் எய்து கின்றான். இந்நிலைக்கும் அன்புணர்வே அவனுக்கு அடிப்படியாக விருந்தது.

கட்டுமீறிய அன்பு வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருந்தவன் ஒரு கட்டுப் பாட்டிற்குள் உரிமை வாழ்க்கை வாழத் தொடங்குகின்றான். அக்கால் அவன் முதன்முதல் விளங்கிக் கொண்ட அன்பையே உரிமைப் படுத்த முனைகின்றான். இவ் விளக்கங்களை ஓர் ஆணையும் ஒரு பெண்ணையும் வைத்துப் பாகுபாடு செய்து பார்ப்போமாயின் இவை நமக்கு நன்கு விளங்கும். ஏனெனில், ஆண் அறிவுக்கும் பெண் அன்புக்கும் உரியவர்களென்று முன்னர் கண்டோம். இனிப்பு, காரம் என்னும் நுண்சுவை யுணர்வுகளை உணர்த்தும் பொழுது, அவற்றை எத்தனை முறை திருப்பித்திருப்பிச் சொன்னாலும் நன்கு விளங்கிக் கொள்ளாத ஒருவன், அவை தோய்ந்த பொருள்களைச் சொல்லி விளக்கினால், எளிதில் விளங்கிக் கொள்வது போல், அன்பையும் அறிவையும் விளக்க, அவ்வுணர்வு நிறைந்து விளங்கும் பெண், ஆண் இயக்கங்களை வைத்தே விளங்கிக் கொள்ளுதல் சிறந்ததாம் என்க.

மலைப்புறத்து, அறிவு வடிவாகிய ஆணும், அன்பு வடிவாகிய பெண்ணும் அளவிறந்து, கட்டுப்பாடின்றி அன்பென்னும் காதல் வாழ்க்கையில் ஈடுபட்டுக் கிடந்தனர். பின்னர் அவர்கள் அறிவுணர் வுற்றுக் கீழிறங்கிக் காட்டகத்தே வந்து வாழ முற்படும் பொழுது, தன்பொருள் உரிமையுணர்வு அவர்கள் பால் தலைதூக்கியது என்றோம். அந் நிலையில்தான் அவர்கள் ஒருவனுக்கு ஒருத்தி, ஒருத்திக்கு ஒருவன் என்னும் கட்டுப்பாடு சான்ற உரிமை வாழ்க்கையில் அடியெடுத்து வைக்கலாயினர். இக்கால் அவர்க ளிடத்து அன்புணர்வுடன், அறிவுணர்வும் ஒரு சேர வளர்ந்திருந்தது.

அவர்களுக்கு ஏற்கனவே விளங்கியிருந்த பொருள் வேறுபாட்டு அறிவும், பொருட் பயனறிவும், தன்தேவையறிவும் இன்னும் சிறந்து விளங்கித் தோன்றத் தொடங்கின.

இக்கால் இன்னொன்றையும் நாம் தெளிவாக விளங்கிக் கொள்ளுதல் வேண்டும். அன்போ, அறிவோ பல படிநிலைகளில், முறையே தம்தம் கால்களை ஊன்றி வளரத் தொடங்குங்கால், அவை முன்னர் கடந்து வந்த படிநிலைகள், பிந்திய படிநிலைகளுக்கேற்ப மேன்மேலும் விளங்கித் தோன்றும். எடுத்துக்காட்டாக, அறிவு தன் தேவையறிவு நிலையை எய்தும் பொழுது, அதற்கு முந்திய பொருட்பயனறிவு நிலை ஒரு பங்கும், அதற்கு முந்திய பொருள் வேறுபாட்டு அறிவுநிலை இருபங்கும், வளர்ந்திருக்கும். இனி, அறிவு தன்பொருளுரிமை உணர்வுநிலையை அடையும் பொழுது, தன் தேவையறிவு நிலை ஒருபங்கும், பொருட் பயனறிவுநிலை இருபங்கும், பொருள் வேறுபாட்டு அறிவு நிலை மூன்று பங்கும் வளர்ந்திருக்கும். இந்நிலைகள் முழுப்பங்குகளே யன்றி, அவரவர் தனிநிலைக்கும், முயற்சிக்கும், இயல்பூக்கச் சூழலுக்கும் தக்கபடி, அரைப்பங்கும், கால்பங்கும், அரைக்கால் பங்குமாகவும் வளரும் தன்மையுடையன. மொத்தத்தில் சொன்னால் அறிவுநிலை பல்லாயிரக்கணக்கான வேறுபாட்டு நிலைகளை உடையது. ஒரு மலையத்துணை யறிவுக்கு, அம்மலையிலுள்ள மண்ணத்தனை வேறு பாடுகள் இருக்கலாம். எனவே, அவற்றின் பொதுத் தன்மைகளையே நாம் ஒருவாறு விளங்கிக் கொள்ளுதல் இயலும் அன்றி, அவற்றின் சிறப்புத் தன்மைகளை நாம் மேலோட்டமாக விளங்கிக் கொள்ளுதல் இயலாதாம் என்க. இனி, ஒவ்வொரு படிநிலையும் நுணித்து நோக்க நோக்க, அதனதன் உண்மைகளும் நமக்கு விளங்கவே செய்யும். ஆனால் மற்ற நிலைகள் முன்னறிந்த பொது நிலையறிவுடனேயே நின்று கொள்ளும் என்க.

ஒரு வண்டியிலேறிச் செலவு மேற்கொள்ளுவான், அவ்வண்டியின் பெரும் பாதை வழியாகவே சென்று கொண்டிருந்தால், இடையிலுள்ள ஊர்களை மேலோட்டமாகவே, அவ்வவற்றின் பெயர்கள், விரிவுகள், அமைப்புகள் முதலிய பொதுநிலைகளை மட்டுமே விளங்கிக் கொள்ள முடியும். இனி, அவன் ஓர் ஊரின் முழுச்சிறப்பையும் விளங்கிக் கொள்ள விரும்பாவானாகில், அவன் அப் பெரும் பாதையினின்றும், வண்டியினின்றும் இடை விலகி, அவ்வூரின் கண் ஊடறுத்துச்

செல்லும் வீதிகளிலும், குறுக்கும் நெடுக்குமாயுள்ள தெருக்களிலும், இடுக்கும் ஒடுக்கமுமாயுள்ள சந்துகளிலும் நடந்து, நின்று, கேட்டு, உசாவி அறிந்து கொள்ளுதல் வேண்டுமன்றோ. இனி, ஊரின் அகப் புற அமைப்புகளைப்பற்றி மட்டுமன்றி, அவ்வூரின் மக்களமைப்பைப் பற்றியும் அவன் அறிந்து கொள்ள வேண்டுமானால், அவன் அவ் வூரிலேயே சிறிது காலந் தங்கியிருந்து அவ்வூர் மக்களொடு படிப் படியாகத் தொடர்பு கொண்டு, அவர்கள் வாழ்க்கை நிலைகள், முன்னேற்ற விருப்பு முயற்சிகள் முதலியவற்றை ஆய்ந்தறிதல் வேண்டுமன்றோ? இனி, அவன் அம் மக்களின் வரலாற்றையும், பண்பாட்டையும், அவர்தம் முன்னோர்களைப் பற்றியும் அறிய வேண்டு மாயின், அவர்கள் பேசுகின்ற மொழியையும், அதன் இலக்கிய இலக்கணங்களையும், அவற்றின் வரலாறுகளையும், அவை தொடர்பான பிறஇன மக்கள் இயல்புகளையும் அறிந்து கொள்ளல் வேண்டுமன்றோ? இனி, இத்துணையளவு முயன்று அவன் அறிந்து கொண்டாலும் அவன் தன்னுடைய உணர்வு நிலைக்கும் அறிவு நிலைக்கும் ஏற்றவாறுதானே அறிந்து கொள்ள முடியும். இவ் வுண்மையை ஒருவாறு உணர்ந்து கொள்வீர்களானால் அறிவுநிலைக்கு ஒவ்வொரு துறையிலும் எத்தனைப் படிநிலைகள் உள்ளன என்பதை யும், அவை எவ்வாறு மேன்மேலும் விரிந்து கொண்டே செல்கின்றன என்பதையும் அறிந்து கொள்வீர்கள். (தொடரும்)


## தென்மொழி, கடலூர் - 1

தனித்தமிழில் வெளிவரும் உயர்ந்த இலக்கிய இதழ்.

ஒவ்வொரு தமிழ்த்திங்களும் முதல் நாளன்று வெளிவரும்.

| | உள்நாடு | கொழும்பு | வெளிநாடு |
|---|---|---|---|
| ஆண்டுக்கட்டணம்: | 9 உருபா. | 10-50உருபா | 14உருபா |
| அரையாண்டுக்கட்டணம்: | 5உருபா | 6 உருபா. | 7-50 |
| தனியிதழ்: | 75காசு | 90 காசு | 1-10 |

ஓரிதழுக்கு உரு. 1-50 மேனி முன்பணம் கட்டக்கூடிய விற்பனையாளர்கள் எழுதிக்கேட்க.


## கழுதை அழுத கதை

*பிழைதிருத்தம்: 1225-ஆம் அடியில் உள்ள 'இன்னாள்' என்ற சொல்லை 'இந்நாள் என்று திருத்திக் கொள்க!*

# கழுதை அழுத கதை

பெருஞ்சித்திரன்
(துரை-மாணிக்கம்)

"இன்ன கருத்தெல்லாம்
இங்கிருந்த வாறே, நான்
சொன்னேன், என் றெண்ணுதீர்.
சொந்தக் கணவனுடன்
மக்களிடை வாழ்ந்திருந்தேன்.
மாதமொன்று ஆண்டொன்று?
தக்கபடி பல்லாண்டு
வாழ்ந்திருந்து தான், உரைப்பேன்!

என்னுரையைக் கேட்கும்
எவரேனும்-இன்றன்று-
பின்னரே னும்-ஒருவர்
பீற்றலுரை என்பாரோ?
சொன்ன கருத்தைப்
பிழையென்று சொல்லுதற்கே
முன்னே வருவாரோ?
மாந்தரின் முன்,கேட்பேன்:

-உங்கள் இனப்பெருமை
என்னென் றுரையுங்கள்!
பங்கறைப் பெண்கழுதை
கேட்பேன், பகருங்கள்!
சூளுரைத்துக் கேட்கின்றேன்;
சொல்லுங்கள்! என்சொலினும்
தூளுரையாய்ப் போகும், அது, என்
தூய்மையுரை முன்னாலே!

ஆன்ற அறமென்பீர்!
அப்பால் பொருளென்பீர்!
மூன்றனதாய் இன்பமென
நூலுள் முழக்குகின்றீர்!
நீவிர் முழக்குகின்ற
நெட்டையறம் என்ன? அதன்
ஈவுநிலை என்ன? என்றே
எங்கட் குரைப்பீரோ?

உங்களுக்குள்-உங்கள்
ஒருவரையே தாழ்த்துகின்றீர்!
எங்கள் இனத்திலில்லா
இந்நிலையோ. உங்கள் அறம்?

பல்லோர் பொருளைப்
பறித்தொருவ ரே, வாழ்வீர்!
சொல்லுங்கள்! ஈதோ
பொருளென்று சொல்லுவது?

அன்பெனவே பேசி
அளவில்லாப் பெண்டிரையே
இன்பத்திற் கேய்க்கும்
இதையோ, நீர் இன்பமென்றீர்!

கள்ளம், கரவு, இழிவு!
காலமெல்லாம் பொய்வாழ்க்கை!
'உள்ளம்' என்றே இவ்விடையில்
ஓங்கிக் கதறுகின்றீர்!
உங்களிலே, கோடியிலே,
'உள்ளம்' எனுமுயர்ந்த
பொங்குதமிழ்ச் சொல்லின்
பொருள்-ஒருவர் கூறுவரா?


பெண்கழுதை கேட்கின்றேன்;
பேசட்டும் மக்களென்பார்!
உண்கவளத் திற்காக
உள்ளத்தை விற்கின்ற
மக்களையே கண்டிருப்பேன்!
மாண்புள்ளம் கொண்டுயர்ந்த
தக்கார் ஒருவரை, என்
தாழ்வான வாழ்க்கையிலே
கண்களிலும் கண்டதில்லை!
காதாலும் கேட்டதில்லை!
பெண்களைப் பற்றியவர்
பேசுவதைக் கேட்டாலோ,
தெய்வப் பொலிவிருக்கும்;
தீதுகளை ஆய்ந்தாலோ,
பொய்வடிவம் பட்டுவிடும்;
போலிவுரு வாகிவிடும்!

(தொடரும்)

தொடர்: 11

# பிழையில்லாமல் எழுதப் பழகுங்கள்!

பேரா மு. வை.
அரவிந்தன் கீ. க. மு.



## 14. இடம் விட்டு எழுதுதல்

ஒரு வரியின் முடிவில் ஒரு சொல்லைப் பிரித்து அடுத்த வரியில் எழுதவேண்டி இருப்பின் ஒருவகை ஒழுங்கை மேற்கொள்ள வேண்டும். திரு-வாசகம் என்றும் மணி-மேகலை என்றும் பிரிப்பது நல்லது. தி-ருவாசகம் என்றோ ம-ணிமேகலை என்றோ பிரிக்கக் கூடாது. பிரிக்கப்பட்ட சொல் என்பதைக் காட்ட, சிறுகோடு இட்டு இணைத்துக் காட்டவேண்டும். தொடர்ந்து எழுதிக் கொண்டுவரும்போது மெய் எழுத்து ஒரு வரியின் தொடக்கத்தில் இடம் பெறுதல் கூடாது.

நீளமான செய்திகளைச் சுருக்கமாய்ச் சில வரிகளில் எழுதும் போது, பொருள் தெளிவோடு எழுதவேண்டும். தலைப்புச் செய்தி, முதன்மையான அறிவிப்பு ஆகியவற்றைப் படித்தவுடனே விளங்குமாறும் கவர்ச்சி ஏற்படும் வகையிலும் எழுதவேண்டும். நீண்ட கட்டுரையில் உள் தலைப்புகளைத் தடித்த எழுத்தில் இடம் விட்டு எழுதவேண்டும். ஒன்று இரண்டு என்று சில செய்திகளை எண்ணிக் கூறும் போது ஒன்றன் கீழ் ஒன்றாக எழுத வேண்டும். முகவரி போன்றவற்றை இவ்வாறே எழுத வேண்டும்.

கற்பவர் எளிதில் பொருள் உணர்வதற்குப் பத்திப்பிரிவு பெரிதும் துணை செய்கின்றது. ஒவ்வொரு பத்தியிலும் ஒவ்வொரு பொருள் அமையுமாறு பத்தி பிரிக்க வேண்டும். செய்யுளை எழுதும் போது சீர் பிரித்து, அடி பிறழாமல் எழுத வேண்டும். பிழை ஏற்படாமல் இருக்க மூல நூல்களைப் பார்த்துச் செய்யுளை எழுதுவது நல்லது.

## 15. எண்ணும் எழுத்தும்

உரைநடையின் இடையே எண் வந்தால் அதனை எழுத்தால் எழுத வேண்டும். ஒன்று, எட்டு, நூறு, ஆயிரம் என்று எழுதவேண்டும். கால், அரை, முக்கால், போன்ற பின்ன எண்களையும் எழுத்தால் எழுத வேண்டும். மிகப் பெரிய எண்களை எண்ணால் எழுதுவதே சிறந்தது. ஒளி ஒரு வினாடிக்கு 1,86,00,000 கற்கள் செல்லும் என்று எழுதலாம்.

10-ம், என்று எழுதாமல் பத்தாம் என்றே 10-ஆம் என்றே எழுத வேண்டும். 8-வது என்று எழுதாமல் எட்டாவது என்றே 8-ஆவது என்றே எழுத வேண்டும். இராசராசன் I, குலோத்துங்கன் III என்று எழுதாமல் முதலாம் இராசராசன் என்றும், மூன்றாம் குலோத்துங்கன் என்றும் எழுத வேண்டும்.

ஒன்றன் கீழ் ஒன்றாய்ப் பல பெயர்கள் வரின் அவற்றிற்கு எண் குறிப்பிட்டு எழுத வேண்டும். ஒரே உட்பிரிவுக்குள் பலவேறு செய்திகள் வரின், உரோமானிய எண்ணையோ (I II III), எழுத்துகளையோ (அ ஆ இ) பயன்படுத்தலாம். எண்களுக்கு அடைப்புக் குறிகள் இட்டும் (1) (2) (3) எழுதலாம்.

## 16. சுருங்கிய வடிவம்

உரைநடை ஆசிரியர்கள் தாம் மேற்கோள் காட்டும் நூலின் பெயரையும் ஆசிரியர் பெயரையும் சுருக்கமாகச் சில எழுத்துகளால் குறிப்பிடுகின்றனர். அவற்றை வழி வழியாகப் பலரும் கையாளுவதால் ஒருவகை மரபு ஏற்பட்டுள்ளது. எனவே எல்லார்க்கும் எளிதில் விளங்கும் சுருங்கிய வடிவங்களையே நாமும் வழங்குதல் வேண்டும். இன்றேல் சுருங்கிய வடிவம் பற்றிய விளக்கத்தை முன்னரே அறிவித்தல் வேண்டும்.

திரு. வி. க., உ. வே. சா. என்பவை எல்லாரும் அறிந்த தமிழ்ப்பெரியார்களின் பெயர்களாகும்.

மதுரைக் என்று சுருக்காய்க் குறிப்பிடுவது மதுரைக் காஞ்சியா, மதுரைக் கலம்பகமா என்னும் ஐயத்தை உண்டாக்கும். ஆதலின் இவ்வாறு ஐயம் ஏற்படாத வகையில் தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும். —தொடரும்.

**தமிழ்ச்சிட்டு, கடலூர்-1.**

(தனித்தமிழ்ச் சிறுவர் கலையிதழ்)

| | உள்நாடு | கொழும்பு | வெளிநாடு |
|---|---|---|---|
| ஆண்டுக்கட்டணம் உருபா | 3-00 | 4-50 | 6-00 |
| தனியிதழ் ,, | 0-25 | 0-35 | 0-50 |

(அரையாண்டுக் கட்டணம் இல்லை)

ஓரிதழுக்கு 50 காசு மேனி முன்பணம் கட்டக்கூடிய விற்பனையாளர்கள் எழுதிக் கேட்க!

# பள்ளி நூலகம்

—நா. எழில்-மகிழ்நன்.

குழந்தைகளே!

வணக்கம். உங்கள் பள்ளியில் ஒரு நூலகம் இருக்கும். அந் நூலகத்தை நீங்கள் பயன்படுத்துவதுண்டா? உங்களில் பெரும் பான்மையோர் அதனைப் பயன் படுத்தியிருக்க மாட்டீர்கள். அதற்கு முதற் கரணியம், நூலகத்தின் அருமை பெருமைகளையும், அதனால் விளையும் பெரும்பயனையும் நீங்கள் உணராமையே. அப்படியிருப்பது மிகவும் தவறு. நூலகத்திலுள்ள பல்வகை நூல்களையும் நீங்கள், இளம் அகவையிலேயே நுணுகிப் படித்தால்தான் உங்கள் அறிவு வளரும். பாடப் பொத்தகங்களைப் படித்தால் போதாது. அறிவு இன்னும் செப்பமாய் வளர நூலகப் பொத்தகங்களையும் படிக்க வேண்டும்.

"இந்தியாவில் பள்ளி மாணவர்களிடம் படிக்கும் பழக்கம் எத்தனைப் பேர்களிடமிருக்கிறது என்ற புள்ளி விளத்தத்தினைக் கணக்கிட இந்தியக் கல்வி அமைச்சகம் எண்ணியது. அவ் விளத்தம், சராசரியாக ஒரு மாணவன் 0.9 புத்தகமே படித்திருப்பதாகக் கூறுகிறது. ஆனால், அயல் நாடுகளில் இதைப்போன்று ஐந்து பங்கு ஒவ்வொரு மாணவனும் பொது நூல்களைப் படிக்கின்றான்."

இந்தச் செய்தியினை நோக்கும்போது நம் நாட்டின் கீழ்நிலையினை ஓரளவு நீங்களே உணரலாம். மேலும், அமெரிக்காவில் தொடக்க நிலைப்பள்ளி மாணவர்களே நூலகங்களைச் செப்பமாகப் பயன்படுத்து கின்றனர். முதல் வகுப்பிலேயே பொது நூல்களை விரும்பிப் படிக்கும் பழக்கத்தை ஆசிரியர் தூண்டுகின்றார். ஆசிரியரின் தூண்டுதலை மிக்கக் கருத்துடன் ஏற்று மாணவர்கள் செயல்படுகின்றனர்.

உயர்நிலைப்பள்ளி நூலகத்தில், ஒப்பு நோக்கு (Reference) நூல்களை மிகுதியாக வாங்கி வைத்து மாணவர்களை ஒப்பாய்வில் ஈடுபடுத்துகின்றனர். அத்துடனின்றி, அவர்கள் நாடோறும் நூலகஞ் சென்று நாளிதழ்கள், பொழுது போக்கு நூல்கள் முதலியவற்றை முறையாகப் பெற்றுப் படிப்பதை வழக்கமாகக் கொண்டுள்ளனர். மேலும், அவர்கள் நிலாச்செலவு ஆராய்ச்சியினைப் பொழுது போக் கிற்காகப் படித்து மகிழ்கின்றனர்.

ஆனால், மாணவ மணிகளே! உங்கள் நிலையை எண்ணுங்கள். உங்கட்கு இலவய நூலக வாய்ப்பிருந்தும், அப்பக்கம் அடிவைப்பதே

யில்லை. உங்களின் நூலகப் பொறுப்பாளர் வலிந்து நூல்களைக் கொடுத்தாலும், வீட்டிற்கு எடுத்துச் சென்று பிரித்துக் கூடப் பார்க்காமலேயே மீண்டும் கொணர்ந்து கொடுத்து விடுகின்றீர்கள். இதனால் சுமந்ததுதான் ஊதியம்!

இங்ஙன், பொதுவகை நூல்களைப் படிக்காமைக்குக் கரணியம் நாம் அமெரிக்க மாணவர்களைப் போல் கல்வியில் நாட்டஞ் செலுத்தாமையே. அவர்கட்கு அறிவைப் பல் துறைகளிலும் வளர்த்துக் கொள்ள வேண்டுமென்கின்ற அக்கறை (Interest) உள்ளது. ஆனால் நமக்கு அத்தகு வெண்ணம் எள்ளளவேனும் உண்டா என்பது, ஐயமே.

ஆகவே, நம் அறிவு மெய்யறிவாகி எல்லோராலும் பல்லாற்றானும் பலபடப் பாராட்டப்பட வேண்டுமென்கின்ற எண்ண எழுச்சி நம் உள்ளத்திலே தோன்றுமாயின், இன்றே இப்பொழுதே ஆங்காங்குள்ள பள்ளி நூலகங்களுக்குச் சென்று, அனைத்தியல் நூல்களையும் ஒவ்வொன்றாகப் பெற்றுப் படிக்க வேண்டும். காலத்தைப் போற்றிக் கல்வியிலே கருத்தினைச் செலுத்தி முன்னேற வேண்டும். பிறரையும் இயன்றவாறெல்லாம் முன்னேற்றவும் வேண்டும். O

---

O சிறுவர்களே சிறுமியர்களே!

உங்களுக்கான முத்துப் பாடல்கள்! 0
உங்கட்கு உணர்வூட்டுவன! 0
உள்ளத்திற்கு ஒளியூட்டுவன! 0

0 தமிழ்ச்சிட்டில் வெளிவந்த
பாடல்களின் தொகுப்பு நூல்!

0 அமிழ்தப் பேழை!
ஏராளமான எழிற்படங்கள் நிறைந்த நூல்
வெளி வந்து விட்டது!
விலை: 3-50
பதிவஞ்சல் செலவு: 1-25

**பள்ளிப் பறவைகள்**
(முதல் தொகுப்பு)
கிடைக்குமிடங்கள்:

வள்ளுவர் நூலகம்
19, இலட்சுமிநாயக்கன் தெரு,
இராசிபுரம் (அ.நி) சேலம் மாவட்டம்.

ஆசிரியர்,
தென்மொழி
கடலூர்-1ர்

# அவர்கள் வாழ்வில் ஒரு நிகழ்ச்சி!

—வை. பழம்

1. சியார்சு பெர்னூர்டுசா உலகப் புகழ்பெற்ற ஆங்கில நாடகாசிரியர். எல்லாராலும் சிறந்த அறிஞர் என்று பாராட்டப் பெற்றவர். அவர் பிறந்தது அயர்லாந்து; வாழ்ந்தது இங்கிலாந்து அவரை ஒரு முறை அவருடைய நண்பர் இலில்லா மக்கார்தி என்பவர், "தாங்கள் அயர்லாந்தில் தங்கித் தங்கள் நூல்களை எழுதாமல் இங்கிலாந்துக்கு வரக் கரணியம் யாது?" என்று கேட்டார். அதற்கு அவ்வறிஞர், "அதற்குக் கரணியமா? இங்கிலாந்து அயர்லாந்து நாட்டை வெற்றி கொண்டது. அதனால் இங்கு வந்து இங்கிலாந்தை வெற்றிபெறுவதைத் தவிர எனக்கு வேறு வழியில்லை. நான் இங்கிலாந்தை வென்று விட்டேன் என்பதைத் தாங்கள் அறிவீர்கள்" என்று விடையிறுத்தார்.

2. இரண்டாயிரத்து ஐநூறு ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்தவர் சாக்ரடீசு! கிரேக்க நாட்டைச் சேர்ந்தவர். சிறந்த அறிஞர். மெய்யறிஞர். கருத்துச் சிற்பி. பகுத்தறிவுப் பாசறை. அவருக்கு வஞ்சகர்கள் நஞ்சுக் கோப்பையைக் கொடுத்துப் பருகச் செய்தனர். நஞ்சுச் சாற்றைப் பருகும்போது அவரிடம் அவருடைய நண்பர் ஒருவர், "தங்களை எங்கே புதைக்க வேண்டும் என்று விரும்புகிறீர்கள்?" என்று கேட்டார். அதற்கு அவ்வறிஞர், "எங்கே வேண்டுமானாலும் புதையுங்கள். ஆனால் என்னைப் பிடிக்க முடியுமோ உங்களுக்கு?" என்று சொன்னார்.

3. சியார்சு வாசிங்டன் அமெரிக்காவின் முதல் குடியரசுத் தலைவர். சிறந்த போர் வீரர். பெயர் பெற்ற படைத்தலைவர். அவர் வீட்டைச் சுற்றிலும் அழகான தோட்டம் உண்டு. அதைக் காண மக்கள் அடிக்கடி போய் வருவதுண்டு. ஓர் ஆங்கில இளைஞர் ஒருநாள் அந்தத் தோட்டத்தைப் பார்த்து வரும்போது "என்ன இந்த வேலி மிக அழகாக இருக்கிறதே! இதைத் தலைவர் இங்கிலாந்திலிருந்து பெற்றார் என்று எண்ணுகிறேன்," என்று மிகுந்த இறுமாப்புடன் கூறினர். அதைக் கேட்ட அவருடைய தோட்டக்காரன் மெதுவாகச் சிரித்துக் கொண்டே, "ஆமாம் அங்கிருந்துதான் பெற்றார். ஆனால் அதை மட்டுமன்று. இந்த அழகான அமெரிக்க நாடு முழுவதையும் இங்கிலாந்திடமிருந்து -தான் பெற்றார்," என்று புன்னகையோடு கூறினான்.

4. உரோமின் அரசுக் கட்டிலில் அரசு புரிந்தவர் சூலியசுசீசர். திறமைமிக்க பேரரசர். ஆற்றல் மிக்க போர் வீரர். சிறந்த கல்வியறிவு பெற்றவர். மக்களுக்கு நன்மைகள் பல செய்தவர். அவர் ஒருநாள் உரோமின் வீதிவழியே சென்றார். வேற்று நாட்டவர்

சிலர் குரங்குகளையும் நாய்களையும் தங்கள் மடியில் வைத்து மகிழ்ந்து கொண்டிருப்பதை கண்டார். அவர் உடனே தம்முடன் வந்த நண்பர்களிடம், 'அவர்களுடைய நாட்டுப் பெண்கள் குழந்தைகள் பெறுவதில்லையோ?'' என்றார்.

6. **ஆபிரகாம் இலிங்கன்** தொடக்கத்தில் உழவுத் தொழில் செய்தவர். வழக்கறிஞராயிருந்தவர். நாட்டுத் தொண்டே தன் வாழ்க்கை எனக் கொண்டவர். சிறந்த பேச்சாளர். ஆற்றல் வாய்ந்த தலைவர். குடியரசுத் தலைவராயிருந்தவர். அடிமை நிலையை ஒழிக்கப் பாடுபட்டவர். துமுக்கியின் குண்டுக்குத் தம்வாழ்வை இரையாக்கியவர். ஒருநாள் அவர் தம்முடைய காலணியைத் துடைத்துக் கொண்டிருந்தார். அதைக்கண்ணுற்ற அவர் நண்பரொருவர் நாட்டின் தலைவரே இப்படிப்பட்ட பணியாள் வேலையைச் செய்வதற்காக வியந்தார். வியப்புடன் அத்தலைவரிடம், "என்ன நீங்களே உங்கள் காலணிகளைத் துடைத்துத் தூய்மைப் படுத்திக் கொள்கிறீர்களே!" என்றார். அதற்கு அத்தலைவர். ''அப்படியானால் நான் யாருடைய காலணியைத் துடைக்க வேண்டும் என்று கூறுகிறீர்கள்'' என்று கேட்டார். O

# தெரிந்து கொள்ளுங்கள்!

0 சுவிட்சர்லாந்தில் ஆத்தம் உறிஞ்சும் ஒருவகைக் காட்டு மரங்கள், ஏறத்தாழ 55 நிமயங்களுக் கொரு தடவைக் கிறீச்சிட்டுக் கத்துகின்றனவாம்.

0 தோட்டத்தினை அழிக்கின்ற வெட்டுக்கிளிகளை விரட்ட வேண்டுமா? மிக ஓசைப் படும்படி தகரத்தைத் தட்டுங்கள் போதும்.

0 காட்டிலே தன் விருப்பப்படி வாழும் அரிமாவை விடக் கூண்டிலே அடைத்து வளர்க்கும் அரிமாவே நெடு நாட்கள் உயிருடன் வாழ்கின்றதாம்.

0 பறிக்கப்பட்ட பழங்களுக்கும் உயிருண்டா? உண்டு. அவை மேலுள்ள துளைகளின் வழியாக உயிர்க்கின்றன. காற்றோட்டம் இல்லாத இடத்தில் இருக்கும் பழங்களை விடக் காற்றோட்டம் உள்ள இடத்தில் இருக்கும் பழங்கள் நெடுநாளைக்கு அழுகாமல் இருப்பதைக் காணலாம்.

0 மாந்த உருவத்தை ஒத்திருக்கும் கரடி ஒன்றினைப் பிடித்துள்ளார்கள், கங்கேரிய விலங்குக் காட்சி சாலையினர். அது, மாந்தனைப்போல் செயல்கள் செய்யவும், சிரிக்கவும் செய்கின்றதாம்.

—அன்னமங்கலம் "மணவாளன்"

# முத்துமொழிகள்

0 மாந்தனிடம் துணிவில்லாத ஒழுக்கமோ, ஒழுக்கமில்லாத துணிவோ இருந்தால், அவன் கோழையாகவோ, முரடனாகவோ ஆகிவிடுகிறான். —பிளேட்டோ

0 நன்மை பயக்கும் ஒரு செயலைச் செய்யத் தொடங்கும்போது, அது நேர்மையானதா, இல்லையா, என்பதையே ஆராய வேண்டும். அதனால் உயிருக்கு ஊறு நேருமோ என்றெண்ணுவது கோழையின் செயல். —சாக்ரடீசு

0 இன்பத்தில் ஆழ்ந்து பண்பு கெடாமலும், துன்பத்தில் மூழ்கித் தட்டுக் கெடாமலும் இரண்டின் பண்புகளையும் ஆய்ந்து ஏற்றுக் கொள்வதே வாழ்விலும, கலையிலும், அழகும், கனிவும் நல்கும். —பிளினி

0 எந்த மாந்தனும் தவறு செய்யக்கூடும். ஆனால் மூடனைத் தவிர வேறு எவனும் அதைத் தொடர்ந்து செய்ய மாட்டான்.—சிசரோ.

0 மாந்தரின் தலையாய பகைவர்கள் அவனின் கண், காது, வாய் ஆகிய மூன்று உறுப்புகளுமே யாகும். எவன் இம் மூன்று உறுப்புகளையும் ஒழுங்கானபடி பயன்படுத்துகிறானோ அவனே மாந்தரில் மணியாய் விளங்குவோன். —பெர்னார்டு சா.

தொகுப்பு நா. பொன்னரசன். (நா. கனகராசன்)

0 மாந்தன் ஒருவன் தான் சிரிக்கும் தகுதி பெற்றவன் என்று கூறுகிறார்கள். அதே நேரத்தில் பிறர் பார்த்துச் சிரிக்கத்தகும் நிலை பெற்றவனும் அவன் தான். —கிரிவிலே.

0 பல இயல்பு வாய்ந்த நண்பர்களின் தொடர்பைவிடத் தேர்ந்தெடுத்த சில நூல்களின் உறவு மிகப் பயன் அளிக்கும் —யாரோ

0 புகழ், இகழ் ஆகியவற்றைக் கருதாது என்றும் உண்மையை மேற்கொண்டு செய்கின்ற ஈகமே அனைத்திலும் சிறந்தது. —விவேகாநந்தர்.

0 அறிவு என்பது ஆற்றைப் போன்றது. அஃது எவ்வளவுக் கெவ்வளவு ஆழமானதோ அவ்வளவுக் கவ்வளவு அமைதியாக ஓடும். —பேகன்.

0 கருத்து பழையதாகவுமிருக்கலாம் பலர் கூறியதாயுமிருக்கலாம்; ஆயினும் உயர்ந்த முறையில் அழகாய்க் கூறுபவனுக்கே அஃது உரியதாகும். —இலாவூசு.

0 அறியாதவனாக இருப்பதில் இழுக்கில்லை அறிந்து கொள்ள விருப்பமில்லாமல் இருப்பதே இழுக்கு. —பிராங்லின்

0 சொன்ன சொல்லும், எய்த அம்பும், கடந்த கால வாழ்வும், அசட்டையாய்க் கைவிட்ட வாய்ப்பும் திரும்பி வர மாட்டா. —அரபுமொழி.

(தொகுப்பு: கதிர்மதி)

# உங்கள் பெயர் இவற்றுள் ஒன்றா?

## உடனே தமிழ்ப் பெயராக மாற்றிக் கொள்ளுங்கள்!

வடமொழிப்பெயர் — தமிழ்ப்பெயர்
சாமிவேல் — வேலையன்
சந்திரவேல் — மதிவேலன்
பிரகாசவேல் — ஒளிவேலன்
சிங்காரவேல் — எழில்வேலன்
ரத்தினவேல் — மணிவேலன்
ஜயவேல் — வெற்றிவேலன்
ரங்கநாதன் — அரங்கநாதன்
மங்களநாதன் — மங்கலநாதன்
ஜகந்நாதன் — உலகநாதன்
லோகநாதன் — உலகநாதன்
சற்குணநாதன் — நற்குணநாதன்
ராமநாதன் — அழகநாதன்
காந்திமதிநாதன் — ஒண்மதிநாதன்
சபாநாதன் — அம்பலநாதன்
ஷண்முகநாதன் — அறுமுகநாதன்
பத்மநாதன் — தாமரைநாதன்
கமலநாதன் — தாமரைநாதன்
ஜம்புநாதன் — நாவலநாதன்
சந்தோஷநாதன் — மகிழநாதன்
ஸ்வாமிநாதன் — இறைக்குருவன்
ப்ரேம்நாத் — அன்பநாதன்
ராமன் — அழகன்
சிவராமன் — சிவனழகன்
ஜயராமன் — வென்றியழகன்
சுப்புராமன் — நல்லழகன்
துளசிராமன் — துழாயழகன்
சாந்தாராமன் — அமைவழகன்
முத்துராமன் — முத்தழகன்
மோகனராமன் — நச்சினார்க்கழகன்
கலியாணராமன் — மணவழகன்
கோபாலராமன் — ஆமகவழகன்
ஆனந்தராமன் — இன்பழகன்
பலராமன் — அடல்எழிலன்
ராஜாராமன் — அரசெழிலன்
கோதண்டராமன் — வில்லெழிலன்

வடமொழிப்பெயர் — தமிழ்ப்பெயர்
ஆனந்தவல்லி — இன்பவல்லி
சிங்காரவல்லி — அழகுவல்லி
சுந்தரவல்லி — அழகுவல்லி
சௌந்தரவல்லி — எழில்வல்லி
கலாவல்லி — கலைவல்லி
விஜயவல்லி — அடல்வல்லி
வேதவல்லி — மறைவல்லி
புஷ்பவல்லி — பூவல்லி
அம்புஜவல்லி — தாமரைவல்லி
கனகவல்லி — பொன்வல்லி
அமிர்தவல்லி — அமுதவல்லி
லக்ஷ்மி — திருமகள்
மகாலக்ஷ்மி — பெருந்திருமகள், மாமகள்
சுப்புலக்ஷ்மி — நன்மகள்
ராஜலக்ஷ்மி — திருவரசி
அழகுலக்ஷ்மி — திருவழகி
தனலக்ஷ்மி — திருச்செல்வி
சந்தானலக்ஷ்மி — தாயம்மை
முத்துலக்ஷ்மி — முத்தம்மை
மீனாக்ஷி — கயற்கண்ணி
அம்புஜாக்ஷி, பத்மாக்ஷி, கமலாக்ஷி, ஸலஸாக்ஷி — தாமரைக் கண்ணி
நீலாக்ஷி — நீலக்கண்ணி
சரோஸினி — தாமரைச்செல்வி
பத்மாஸினி — தாமரைச்செல்வி
கமலாஸினி — அலர்மேலம்மை
குமாரி — குமரி, பசலை
வஸந்தகுமாரி — வேனிளங்குமரி
விஜயகுமாரி — வலங்குமரி
ஜயக்குமாரி — வென்றிக்குமரி
சம்பத்குமாரி — செல்வக்குமரி
மீனாக்குமாரி — மீனங்குமரி
சுகுமாரி — நப்பசலை

தொகுப்பு: **கதிர். சுப்பையன்,**
ஆசிரியர், நகராட்சிப்பள்ளி, குடந்தை.

# தமிழ்ச் சொல் வளம்

போன்மை-(LIKENESS) வகைகள்:

ஓவியம்-வரையப்படும் சித்திரம்;
கட்டளை-உருவம் வார்க்கும் அச்சு;
சிலை-நினைவு கூர்தற்கு ஒருவரைப்போல் செய்துவைத்த உருவம்;
படிமை-தெய்வச்சிலை;
பதுமை-தனிப்பட்டவரைக் குறியாது பொதுவாய்ச் செய்து வைக்கப்பட்ட ஆண் பெண் உருவம்;
பொம்மை-சிறு பதுமை;
பாவை-கனவளவில்லாத தோற்பாவை அல்லது கண் பாவை.

மறுதலை வகைகள்:

எதிர் (opposite); திரித்தல் (alteration); பகை (enmity); மறுதலிப்பு(denial); மாற்றுமை அல்லது மறுதலை (Contrariety); மறுப்பு (refutation); மறை (negation); எதிர்மறை (Strong negation); மாற்றம் (transferance); மாற்று (antidote); மாறு (exchange); முரண் (Contradiction); விலக்கு (prohibition); வேற்றுமை (difference); வேறுபாடு (change).

நூல் வகை:

நுவணம் (நுவணை)-கலை இலக்கணம், புத்தகத்திற் கூறப்படும் பொருள்;
புத்தகம்-நூற்பொருள் எழுதிய ஏட்டுத்தொகுதி;
பனுவல்-'பிரபந்தம்'
வனப்பு-செய்யுள் நூல் அல்லது பாவிய வகை;
சுவடி-சிறுபுத்தகம்
கலை-தொழிற்கலை (Art) நூல்-அறிவுக்கலை (Science)

பாயிர வகைகள்:

முகவுரை-நூல் முகத்தில் உரைக்கப்படுவது;
பதிகம்-ஆக்கியோன் பெயர், நூல் வந்தவழி முதலிய பத்துப் பொருள்களைக்கூறுவது;
அணிந்துரை-நூலுக்கு அழகு செய்து நிற்பது;
நூன்முகம்-நூலின் தொடக்கமாயிருப்பது;
புறவுரை-நூலின் இறுதியில் உரைக்கப்படுவது;
தந்துரை-நூலிற் சொல்லப்படாத பொருளைத் தந்துரைப்பது;
புனைந்துரை-நூலைச் சிறப்பித்துரைப்பது.

-தொடரும்

(பாவாணர்-சொல்லாராய்ச்சிக் கட்டுரைகள்)

# பாவாணர் பயன் மொழிகள்

தொகுப்பு: நா. எழில்-மகிழ்நன்

0 குமரி நாடு தமிழன் பிறந்தகம் மட்டுமன்றி, மாந்தன் பிறந்தகமு மாதலால், தமிழே இம்மியும் ஏனைமொழி கலவாத முழுத்தூய இயன் மொழியாகும்.

0 நாட்டுப் பற்றிற்கு உயிர் மொழிப்பற்று. முன்னது எல்லார் வாயிலாகவும் வெளிப்படும்; பின்னது புலவர் வாயிலாக மட்டுமே வெளிப்படும்.

0 ஓர் இயங்கியை ஓட்டத் தெரிவது போன்றது கல்வி; அதனைப் பழுது பார்க்கத் தெரிவது போன்றது ஆராய்ச்சி; ஓட்டத் தெரியாதவர் பழுதுபார்ப்புத் தெரிந்து கொள்ள முடியாது,

0 சமற்கிருதத்திற்கும் தமிழுக்கும் இடைப்பட்ட நிலைமை, தாக்குவோனுக்கும் தற்காப்போனுக்கும் இடைப்பட்ட தொத்ததே. தமிழன் தாழ்வு, பிராமணன் உயர்வு என்ற முறையிலேயே தமிழின் தாழ்வு, சமற்கிருத வுயர்வு என்னும் நிலைமையுள்ளது. தாக்குவோனைத் தாக்காது தற்காப்போன் விடுதலை பெற முடியாது.

0 பிற மொழிச் சொல்லைக் கடன் கொள்வதால் தமிழ் வளரும் என்பார் தமிழறியாதவரும், தமிழ்ப் பகைவரும் தமிழைக் காட்டிக் கொடுப்பவருமே யாவர்.

0 மொழியிலுங் கருத்திலும் அன்றும் இன்றும் என்றும் சிறந்தவன் தமிழனே.

0 தமிழை என்றுஞ் செந்தமிழாகவே வழங்க வேண்டுமென்பது, தொன்னூலாசிரியர் இட்ட நிலையான வரம்பு. அவ் வரம்பினாலேயே, கடந்த மூவாயிரம் ஆண்டாக ஆரியர் எத்துணையோ கேடு செய்திருப்பினும், தமிழ் இன்னும் அழியாது இருந்து வருகின்றது.

0 ஆயிரக் கணக்கான தென்சொற்கள் இறந்துபட்ட இக்காலத்தும் அயன்மொழித் துணையின்றித் தமிழைத் தூய்மையாக எழுதலாம்.

தென்மொழி மின் அச்சகம், கடலூர்-1, தமிழகம்.